


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், சதாவதானி செய்குதம்பிப்பாவலர் அவர்களின் 143-வது பிறந்த நாள் விழாவையொட்டி, அன்னாரது திருவுருவ படத்தினை, நாகர்கோவில், கோட்டார் குமரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் இன்று (31.08.2016) திறந்து வைத்து, மரியாதை செலுத்தினார்.

செ.வெ.எண்: 584/2016 நாள்:31.08.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற,**
**சதாவதானி செய்குதம்பிப்பாவலர் அவர்களின் 143-வது பிறந்த நாள் விழாவில் பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசு.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கும், தமிழ் வளர்த்த சான்றோர்களுக்கும், தமிழகத்தில் தலைச்சிறந்த தியாக சீலர்களுக்கும் நினைவு மண்டபங்கள் அமைத்து அவர்களை நினைவு கூறும் வகையில் ஆண்டு தோறும் அரசு விழாக்களை எடுத்து, அவர்களின் புகழை இந்த உலகிற்கு பறைசாற்றி வருகின்றது. அதனடிப்படையில் தமிழ் இலக்கியவாதியான சதாவதானி செய்குதம்பிப்பாவலர் அவர்களின் 143-வது பிறந்த நாள் விழா, நாகர்கோவில், கோட்டார் குமரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (31.08.21016) நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க, ஆண்டு தோறும் செய்தி மக்கள் தொடர்புதுறை சார்பாக, சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும் அவர்களின் புகழை மாணவ, மாணவியர்கள் அறிய செய்கின்றவகையில், அவர்களிடையே பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றிபெற்ற மாணவர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வகையில் இன்று நடைபெற்ற விழாவில், 6-ஆம் வகுப்பு முதல் 9-ஆம் வகுப்பு வரை நடைபெற்ற பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்கள் பிடித்த மாணவ, மாணவியர்களுக்கும், 10-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை நடைபெற்ற பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்று முதல் மூன்று இடங்கள் பிடித்த மாணவ, மாணவியர்கள் என மொத்தம் 12 மாணவ, மாணவியர்களுக்கு நினைவு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பால்வளத்தலைவர் திரு. எஸ்.ஏ.அசோகன், கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், நாகர்கோவில் நகர்மன்ற தலைவர் திருமதி. எம். மீனாதேவ், தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய உறுப்பினர் திரு. ஏ.ஜஸ்டின் செல்வராஜ், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. எ.வி.மூர்த்தி, வார்டு உறுப்பினர் திருமதி. செல்லத்தாய், சதாவதானி செய்குதம்பிப்பாவலர் தமிழ்ச்சங்கத் தலைவர் பாவலர். பி.ஏ. சித்திக், சதாவதானி செய்குதம்பிப்பாவலர் நற்பணி மன்றத்தலைவர் திரு. எஸ்.ஆர். ஹாஜிபாபு, தலைவர் அப்ஸா திரு. எஸ். மலுக்கு முகம்மது, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் (கட்டிடம் மற்றும் கட்டுமானம்) திரு. ரன்ஸ், நாகர்கோவில் மாவட்ட கல்வி அலுவலர் (பொ) திரு. பி.நடராஜன், குமரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் திரு. எஸ். சொக்கலிங்கம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்(பொ) திரு. நி.சையத் முஹம்மத் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.